# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 14 | 4 Pages | 15.08.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 14 | 4 பக்கங்கள் | 15.08.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ஸ்ரீநகர் லால் சவுக் பகுதியில் தேசியக் கொடி ஏந்தி சுதந்திர தினவிழாவை கொண்டாடிய மக்கள்



ஜம்முகாஷ்மீர், ஆக. 15

சுதந்திர தினவிழாவை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ராஜ்நாத் சிங் தனது வீட்டில் தேசியக்கொடி ஏற்றினார் இந்தியாவின் 77வது சுதந்திர தினவிழா இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. பொதுமக்கள் வீடுதோறும் தேசியக் கொடி ஏற்றியும், தேசியக் கொடியுடன் பேரணி நடத்தியும் தங்களது கொண்டாட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். ஜம்முகாஷ்மீரில் சுதந்திர தினவிழாவையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இருந்தபோதிலும், ஸ்ரீநகர் லால் சவுக் பகுதியில் பொதுமக்கள் தேசியக் கொடி ஏந்தியபடி சுதந்திர தினவிழாவை கொண்டாடினர். பொதுவாக காஷ்மீரில் பாதுகாப்பு காரணமாக முழு அடைப்பு போன்ற நிகழ்வு இருக்கும். தற்போது அதுபோன்ற இல்லை எனக் கூறப்படுகிறது. நேற்று பயங்கரவாதியின் சகோதரர் தனது வீட்டில் தேசியக்கொடி ஏற்றி வைத்திருந்தார். அவர், சுதந்திர தினவிழாயொட்டி காஷ்மீரில் இரண்டு மூன்று நாட்கள் கடைகள் அடைக்கப்பட வலியுறுத்தப்படும். தற்போது அந்த நிலை இல்லை. காஷ்மீர் முன்னேற்றத்தை கண்டுள்ளது எனக் கூறியது குறிப்பிடத்தக்கது. மத்திய பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங், டெல்லியில் உள்ள அவரது வீட்டில் தேசியக்கொடி ஏற்றி சுதந்திர தினவிழாவை கொண்டாடினார்.

## காய்கறி வியாபாரியுடன் மதிய உணவு சாப்பிட்ட ராகுல் காந்தி வீடியோ வைரல்



டெல்லி, ஆக. 15

பாதகமான சூழ்நிலைகளிலும் புன்னகையுடன் முன்னேறுபவர்கள் உண்மையிலேயே நாட்டின் விதியை உருவாக்குபவர்கள். வேறு ஏதாவது காய்கறி வாங்குவீர்களா என்று கேட்டதற்கு, "காசு இல்லை" என்று வியாபாரி மனமுடைந்து பேசியுள்ளார். காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி நேற்று காய்கறி வியாபாரி ராமேஷ்வர் என்பவருடன் மதிய உணவு சாப்பிட்டார். அப்போது பணவீக்கத்தால் தனது கஷ்டங்களை ராகுல் காந்தியிடம் பகிர்ந்து கொண்ட வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. ராமேஷ்வருடனானதனது படத்தைப் பகிர்ந்துகொண்ட ராகுல் காந்தி, "ராமேஸ்வர் ஒரு கலகலப்பான மனிதர்! கோடிக்கணக்கான இந்தியர்களின் அன்பான இயல்பின் காட்சியை அவரில் காணலாம்" என்று இந்தியில் டுவிட்டர் பதிவில் பகிர்ந்துள்ளார். மேலும், "பாதகமான சூழ்நிலைகளிலும் புன்னகையுடன் முன்னேறுபவர்கள் உண்மையிலேயே 'பாரத் பாக்ய விதாதா (இந்தியாவின் விதியை உருவாக்குபவர்கள்)" என்று ராகுல் காந்தி குறிப்பிட்டார். அந்த வீடியோவில், இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, ராகுல் காந்தியும் ராமேஸ்வரும் ஒளிரும் தருணங்களைப் பகிர்ந்து கொள்வதை காண முடிந்தது. வைரலான வீடியோவில், ரமேஷ்வர் தனது காலி கை வண்டியுடன் காணப்பட்டார், தக்காளி விலை மிக அதிகமாக இருப்பதால் வாங்க முடியவில்லை என்று அவர் கூறினார். மேலும், ராகுல் காந்தி வேறு ஏதாவது காய்கறி வாங்குவீர்களா என்று கேட்டதற்கு, "காசு இல்லை" என்று வியாபாரி மனமுடைந்து பேசியுள்ளார். விலைவாசி உயர்வு குறித்து மத்திய அரசுக்கு தெரிவிக்கும் வகையில், ராகுல் காந்தி உள்பட காங்கிரஸ் தலைவர்கள் இந்த பதிவை வைரலாக்கி வருகின்றனர்.

## மேகாலயாவில் நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.4 ஆக பதிவு



மேகாலயா, ஆக. 15

16 கி.மீ ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் அதிர்வுகள் வடகிழக்கு பகுதி முழுவதிலும் உணரப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தின் எதிரொலியால் உயிர் சேதமோ, பொருட்சேதமோஇல்லை. மேகாலயாவில் சுமார் 8.19 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது, ரிக்டர் அளவு கோலில் 5.4 ஆக பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தின் மையம் மேகாலயாவின் சிரபுஞ்சியிலிருந்து தென்கிழக்கே 49 கி.மீ தொலைவில் வங்காளதேச எல்லையில் உள்ள சில்ஹெட் அருகே இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 16 கி.மீ ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் அதிர்வுகள் வடகிழக்கு பகுதி முழுவதிலும், வட மேற்கு வங்கத்தின் சில பகுதிகளிலும், அண்டை நாடான வங்கதேசத்திலும் உணரப்பட்டன. மேலும், நிலநடுக்கத்தின் எதிரொலியால் உயிர் சேதமோ, பொருட்சேதமோ இல்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# 55 ஆயிரம் அரசு பணியிடங்கள் நிரப்பப்படும்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை, ஆக. 15

ஓலா, ஊபர், ஸ்விகி, சொமட்டோ பணியாளர்களுக்கு நல வாரியம். எட்டுக் கோடி மக்களும் ஏதாவது ஒரு விதத்தில் பயனடையும் ஆட்சியை நமது அரசு வழங்கி வருகிறது.

நாடு முழுவதும் சுதந்திர தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. சென்னை கோட்டை கொத்தளத்தில் சுதந்திர தினவிழா வெகு விமரிசையாக நடந்தது. சுதந்திர தின கொடி ஏற்றுவதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காலை 8.48 மணிக்கு போலீசாரின் மோட்டார்சைக்கிள் புடைசூழ கோட்டை கொத்தளத்திற்கு வந்தார். அவரை தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா வரவேற்று முப்படை தளபதிகளை அறிமுகம் செய்து வைத்தார். அதன் பிறகு போலீஸ் டி.ஜி.பி. சங்கர்ஜிவால், சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர், கூடுதல் டி.ஜி.பி. அருண் ஆகியோரையும் அறிமுகப்படுத்திவைத்தார். இதைத் தொடர்ந்து போலீசாரின் சம்பிரதாய அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து திறந்த ஜீப்பில் ஏறி போலீசாரின் அணி வகுப்பை பார்வையிட்டார். கோட்டை கொத்தளம் அருகே சென்றதும் ஜீப்பில் இருந்து இறங்கி கொத்தளத்திற்குள் படிகள் ஏறி விழா நடைபெறும் இடத்துக்கு சென்றார். சரியாக 9 மணிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தினார்.

அப்போது வண்ண பலூன்கள் வானில் பறக்க விடப்பட்டன. ஹெலிகாப்டர் மூலம் மலர்கள் தூவப்பட்டது.

காவல்துறையினரின் கூட்டு குழல் இசைக்கப்பட்டது. அப்போது சுதந்திரதினவிழாவை காண வந்த அனைவரும் எழுந்து நின்று தேசிய கொடிக்கு வணக்கம் செலுத்தினர். இதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுதந்திர தின உரை நிகழ்த்தினார். அப்போது அவர் பேசியதாவது: இன்னொரு முன்னெடுப்பை இந்த விடுதலை நாளில் அறிவிக்கிறேன். தாய்நாட்டிற்காகத் தங்களுடைய இளம் வயதை நாட்டின் எல்லையில் ராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவு பெற்று திரும்பும் முன்னாள் ராணுவத்தினர் பயன்பெறும் வகையில், சுமார் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 ஆயிரம் நபர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கி, திறனை மேம்படுத்தவும், அவர்கள் உரிய பணியில் அமரும் வரையில் தக்க உதவி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். சென்னை போன்ற பெருநகரங்களில் தொடங்கி, பல்வேறு நகரங்களிலும் நாம் அடிக்கடி காணக்கூடிய காட்சி ஒன்று உள்ளது. ஓலா, ஊபர், ஸ்விகி, சொமட்டோ போன்ற நிறுவனங்களைச் சார்ந்த வாகனங்கள் விரைவாக சேவை வழங்கும் நோக்கத்துடன் பயணிப்பதைக் காணலாம். நேரத்தின் அருமை கருதி பணிபுரியும் இத்தகைய பணியாளர்களின் வாழ்க்கை முக்கியமானது. அவர்களின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வகையில், அவர்களுக்கென தனியே நல வாரியம் ஒன்று அமைக்கப்படும் என்பதையும் இன்று அறிவிக்கிறேன். ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் பெண்கள் புதிதாக ஆட்டோ வாங்குவதற்கென ரூ.1 லட்சம் மானியம் வழங்கும் திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 141 பேர் பயனடைந்துள்ள நிலையில், தற்பொழுது மேலும் 500 மகளிர் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும். மேலும், ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும். அதுமட்டுமல்ல, சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். திட்டங்கள் இல்லாத நாளே இல்லை என சொல்லக்கூடிய வகையில், அரசு அறிவிக்கும் திட்டங்களை கடைக்கோடி மக்களிடமும் கொண்டு போய் சேர்க்கின்ற பெரும் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் அரசு ஊழியர்கள். ஆட்சி சக்கரம் சுழல்வதற்கு அவர்களே காரணமாக இருக்கிறார்கள்.

அந்த சக்கரம் வேகமாக சுழல்வதும், மெதுவாக சுழல்வதும் அரசு ஊழியர்களின் கைகளில் தான் உள்ளது. அந்தக் கைகள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். அப்போது தான் வேகம் அதிகமாகும் என்பதை எப்போதும் உணர்ந்திருப்பது திராவிட மாடல் அரசு. எனவே, நடப்பாண்டுகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 55 ஆயிரம் பணியிடங்களை நிரப்ப இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த விழாவில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்குமான அரசு என்பதன் அடையாளமாக இதுபோன்ற திட்டங்களைச்சிந்தித்துசிந்தித்துசெயல்படுத்தி வருகிறோம். எட்டுக் கோடி மக்களும் ஏதாவது ஒரு விதத்தில் பயனடையும் ஆட்சியை நமது அரசு வழங்கி வருகிறது. கூட்டாட்சி இந்தியாவில் இணைந்திருக்கும் மாநிலங்கள் சுயாட்சி உரிமை கொண்டதாகச் செயல்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞரும் தொடர்ந்து குரல் எழுப்பிவந்தார்கள். மக்களுக்கு நேரடித் தொடர்பு கொண்ட அனைத்தும் மாநிலப் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். குறிப்பாக கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். அதைச் செய்தால்தான் நீட் போன்ற கொடூரமான தேர்வு முறை முற்றிலுமாக அகற்றப்பட முடியும். கல்வி, பொருளாதாரம், மருத்துவம், வேளாண்மை, ஏற்றுமதி, திறன்மிகு மனித ஆற்றல் ஆகிய அனைத்து வகையிலும் தமிழ்நாடு சிறப்பான பங்களிப்பை இந்திய நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும் வழங்கி வருகிறது. எல்லார்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் அரசின் சமூகநீதி நிர்வாக ஆட்சிமுறை இந்தியா முழுமைக்குப் பரவுமானால், அதைவிட மகிழ்ச்சியான செய்தி எதுவும் இருக்க முடியாது. மாநிலங்கள் ஒன்றிணைந்த நம் இந்திய நாடு பல்வேறு இனம்மொழிமதம்பண்பாடு கொண்ட மக்கள் அனைவரது வளர்ச்சியையும் கொண்டதாக வளரவேண்டும். சமூகநீதிசமத்துவம்சகோதரத்துவம்சமதர்மம்மதச்சார்பின்மைஒடுக்கப்பட்டோர் நலன் ஆகிய மிக உயர்ந்த கோட்பாடுகள் கொண்ட இந்தியாவை அமைப்பது தான் இந்திய விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும். ஒற்றுமையால் கிடைத்த விடுதலை அதே ஒற்றுமையால் காப்போம். வேற்றுமையை விதைக்கும் சக்திகளை வேரோடு சாய்ப்போம். நாம் இந்தியர்கள் என்ற பெருமையுடன் நம் இந்தியாவை நேசிக்கும் அனைவருக்கும் விடுதலை நாள் நல்வாழ்த்துக்கள். விழாவில் தகைசால் தமிழர் விருது, டாக்டர் அப்துல்கலாம் விருது, கல்பனா சாவ்லா விருது, சிறந்த சேவை புரிந்தோருக்கு பல்வேறுவிருதுகளையும்முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கி கவுரவித்தார்.

மேலும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு அவர் இனிப்பு வழங்கினார். விழாவில் அமைச்சர்கள், ஐகோர்ட்டு நீதிபதிகள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், வெளிநாட்டு தூதர்கள், அரசு துறை அதிகாரிகள், பொதுமக்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## முத்தூரில் கார் மோதி தாசில்தார் டிரைவர் பலி

வெள்ளகோவில், ஆக. 15

அடையாளம் தெரியாத கார் கேசவன் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றுள்ளது. கந்தசாமி மீது வெள்ளக்கோவில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தாராபுரம் அலங்கியம் காமராஜ் நகரை சேர்ந்தவர் கேசவன் (வயது 56). இவர் காங்கயம் தாசில்தாரின் கார் ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் மனைவி பரிமளாவுடன் முத்தூர் ராசாத்தாவலசிலுள்ள கருப்பணசுவாமி கோவிலுக்கு சென்றுள்ளார்.



தரிசனம் முடிந்த பிறகு கோவிலுக்கு அருகேயுள்ள முத்தூர் காங்கயம் சாலையில் நின்று கொண்டிருந்துள்ளார். அப்போது அவ்வழியே வந்த அடையாளம் தெரியாத கார் கேசவன் மீது மோதி விட்டு நிற்காமல் சென்றுள்ளது.

இதில் பலத்த காயமடைந்தஅவரைமனைவி பரிமளா மற்றும் அப்பகுதி மக்கள் மீட்டு காங்கயம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார். விபத்தை ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்ற வாகனத்தை நெடுஞ்சாலை ரோந்து போலீசார் மடக்கிப் பிடித்தனர். காரில் இருந்த நபரிடம் நடத்திய விசாரணையில், அவர் திருப்பூர் கோவில்வழி பகுதியை சேர்ந்த கந்தசாமி (48) என்பது தெரியவந்தது.

இதையடுத்து, கந்தசாமி மீது வெள்ளக்கோவில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## காரை அகற்றாமல் போடப்பட்ட தார் சாலை

திருப்பூர், ஆக. 15

பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

திருப்பூர் பென்னி காம்பவுண்ட் வளாகத்தில் அமைந்துள்ள பாப்பீஸ் ஓட்டல் பின்புறம் தார்ச்சாலை போடப்பட்டுள்ளது. அங்கு சாலையோரம் கார் ஒன்று நின்று கொண்டிருந்ததால் அந்த பகுதியில் சாலை போடாமல் அப்படியே விட்டு விட்டு மற்ற பகுதியில் போட்டுள்ளனர். இது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.



பொதுமக்கள் கூறுகையில், காரை அப்புறப்படுத்திவிட்டு தார் சாலை அமைத்து இருக்கலாம்.

பல இடங்களில் அடி பம்பு, மின்கம்பத்தை அகற்றாமல் அப்படியே சாலை போடப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. அது போல் கார் நிற்கும் பகுதியில் சாலை போடாமல் விட்டுள்ளனர்.

இது குறித்து உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# இன்று தருமபுரி 251 ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம்

தர்மபுரி, ஆக. 15

அந்தந்த ஊராட்சியில் உள்ள புதிய இடங்களில் நடைபெறும் இந்த கிராம சபை கூட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர் தலைமை தாங்குகிறார். அனைத்து ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் ஊராட்சி செயலாளர்கள்கிராம சபை கூட்டம் நடத்த தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வார்கள்.

தருமபுரி மாவட்ட கலெக்டர் சாந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: தருமபுரி மாவட்டத்தில் உள்ள 251 கிராம ஊராட்சிகளில் சுதந்திரதின கிராமசபை கூட்டம் நாளை (செவ்வாய்க்கிழமை) நடத்தப்படவுள்ளது. அந்தந்த ஊராட்சியில் உள்ள புதிய இடங்களில் நடைபெறும் இந்த கிராம சபை கூட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர் தலைமை தாங்குகிறார். அனைத்து ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் ஊராட்சி செயலாளர்கள் கிராம சபை கூட்டம் நடத்த தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வார்கள். கிராம சபை கூட்டத்தை நடத்த உதவியாக ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு பற்றாளரும், கிராம சபை கூட்டம் நடப்பதை கண்காணிக்கஒவ்வொருஊராட்சி ஒன்றியத்திலும் உதவி இயக்குநர் நிலையிலும், இணை இயக்குனர் நிலையிலும் ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்த கிராம சபை கூட்டத்தில் அனைத்து துறை அலுவலர்களும், அனைத்து ஊராட்சி மன்ற உறுப்பினர்களும், ஊராட்சியிலுள்ள வாக்காளர்கள், பொதுமக்கள், மகளிர் சுய உதவி குழுவினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து தரப்பு மக்களும் அதிக அளவில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கவர்னர் மாளிகையில் இன்று நடைபெறும் தேநீர் விருந்தை புறக்கணிப்பதாக முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஆக. 15

தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்தை சிதைக்கும் வகையில் பேசும் கவர்னரை வன்மையாக கண்டிக்கிறேன். 7 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் நடக்கும் நீட் எதிர்ப்பு போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையில் கவர்னர் பேசுகிறார். ஏழை, எளிய, நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களின் நிலையை உணர மறுக்கிறார் கவர்னர் ரவி.

பல சட்ட முன்வடிவுகளுக்கு அனுமதி தராமல், பல்கலைக்கழகங்களைச் சிதைத்தும், உயர்கல்வித்துறையைக் குழப்பியும் வருகிறார் கவர்னர் ரவி. நீட் தேர்வு மரணங்கள் எழுப்பும் தார்மீக கேள்விகள் நமது மனசாட்சியை உலுக்கி வருகிறது.

கவர்னரின் செயலை தமிழ்நாடு கல்வித்துறையின் மீது நடத்தும் சதியாகவே பார்க்கிறோம். சட்ட மன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு அனுமதி தராமலும் இதன் உச்சமாக தமிழ்நாட்டு மாணவர்களை, பெற்றோர்களை, அவர்களது எதிர்காலத்தைச் சிதைக்கும் வகையில் பேசி வரும் கவர்னரை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இதன் அடையாளமாக சுதந்திர தின விழாவையொட்டி, கவர்னர் மாளிகையில் நாளை நடைபெறும் தேநீர் விருந்தை புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அந்த அறிக்கையில் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# சுதந்திர தினத்தையொட்டி உடுமலையில் மினி மாரத்தான் போட்டி

உடுமலை, ஆக. 15

76வது சுதந்திரதினத்தை முன்னிட்டு உடுமலை முன்னாள் ராணுவ வீரர்கள் சங்கம் , லெப்டினன்ட் சுபாஷ் ஐஏஎஸ்., அகாடமி , உடுமலை லேப் அண்ட் எக்ஸ்ரேஸ், பிரியா நர்சிங் கல்லூரி சார்பில் போதைப் பொருள் ,நெகிழி ஒழிப்பு மற்றும் போக்குவரத்து விதிகள் கடைபிடிப்பது பற்றிய விழிப்புணர்வுக்கான மாரத்தான் போட்டி நடத்தியது. போட்டியை முன்னாள் ராணுவ வீரர் சங்க தலைவர் ராமலிங்கம் தொடங்கி வைத்தார். இதில் 500க்கும் மேற்பட்ட உடுமலை மற்றும் மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த பல்வேறு பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்முடன் கலந்து கொண்டனர். ஜூனியர் ,சீனியர், சூப்பர் சீனியர் மற்றும் மூத்த குடிமக்களுக்கான இந்த மாரத்தான் போட்டியில் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். முன்னதாக அறக்கட்டளை வளாகத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. தேசிய கொடியை ஜிவிஜி., கல்லூரி தேசிய மாணவர் படை அலுவலர் கேப்டன் கற்பகவல்லி ஏற்றி வைத்து தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினார். இதில் கேப்டன் வெள்ளியங்கிரி, நாயப் சுபேதார் நடராஜ் கலந்து கொண்டனர். பின்னர் லெப்டினன்ட் சுபாஷ் ரேணுகா தேவி அறக்கட்டளை வளாகத்தில் இருந்து ஊர்வலமாக சென்று ராகல்பாவி பிரிவிலிருந்து போட்டி ஆரம்பித்து மாரத்தான் ஓடினர். மாரத்தான் போட்டிகளுக்கு உடுமலை போக்குவரத்து காவல் ஆய்வாளர் வெங்கடேசன் தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். உடுமலை ,மடத்துக்குளம் பகுதி பள்ளி விளையாட்டு ஆசிரியர்கள் வழி நடத்தினர். தொடர்ந்து மூன்று இடங்களை பெற்ற போட்டியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பரிசுவழங்கும்நிகழ்ச்சிக்கு உடுமலை முன்னாள் ராணுவ வீரர் நலச்சங்க தலைவர் ராமலிங்கம் தலைமை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக கோவை கேப்டன் வெள்ளியங்கிரி, உடுமலை ஜிவிஜி., மகளிர் கல்லூரி தேசிய மாணவர் படை அலுவலர் முனைவர் கற்பகவல்லி, லெப்டினன்ட் சுபாஷ் ரேணுகா தேவி அறக்கட்டளை டிரஸ்டி கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். தொடர்ந்து பள்ளி கல்லூரி மாணவிகள் மற்றும் குழந்தைகளுக்கான ஓவியப் போட்டி, சிலம்பபோட்டி, சாக்கு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உடுமலை முன்னாள் ராணுவ வீரர் நலச்சங்கதலைவர்ராமலிங்கம், செயலாளர் சக்தி ,பொருளாளர்சிவக்குமார், விளையாட்டு இயக்குனர் வெள்ளைச்சாமி (பணி நிறைவு), சுபாஷ் ஐஏஎஸ்., அகாடமி நிறுவனர் செல்வராஜ், டிரஸ்டிகள்கணேசன், என்ஜினீயர் பாலமுருகன் மற்றும் பிரியா நர்சிங் கல்லூரி தவசு மணி செய்திருந்தனர். நிகழ்ச்சிகளைசைனிக் பள்ளி ஆசிரியர் இளமுருகு தொகுத்து வழங்கினார்.



# தொடர் விடுமுறை: நீலகிரி சுற்றுலா தலங்களில் குவிந்த சுற்றுலா பயணிகள்

ஊட்டி, ஆக. 15

மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டம் இயற்கை காட்சிகள் நிறைந்த வனப்ப குதிகள் மற்றும் எண்ணற்ற சுற்றுலா தலங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கு நிலவும் சுற்றுலா தலங்களை பார்க்கவும், இயற்கை அழகினை ரசிக்க வும் தினந்தோறும் நாட்டின் பல்வேறு பகுதிகள் மட்டுமி ன்றி வெளிநாடு களில் இருந்தும் சுற்றுலா பயணி கள் குவிந்து வருகின்றனர். சுற்றுலா பயணிகள் சுற்றுலா தலங்களை கண்டு ரசித்து, இங்கு நிலவக்கூடிய சீதோஷ்ண நிலையையும் அனுபவித்து செல்கிறார்கள். தற்போது சுதந்திர தின தொடர் விடுமுறை விடப்ப ட்டுள்ளது. இதன் காரண மாக கடந்த சனிக்கிழமை முதலே நீலகிரி மாவட்டத்தி ற்கு சுற்றுலா பயணிகள் வருகை கணிசமாக அதிகரி த்துள்ளது.



அனைத்து சுற்றுலா தலங்களிலும் கூட்டம் அலை மோதியது. ஊட்டி தாவரவியல் பூங்காவிற்கு வந்திருந்த சுற்றுலா பயணிகள், அங்கு பூந்தொட்டிகளில் பூத்து குலுங்கிய மலர்களை பார்வையிட்டு கண்டு ரசித்தனர். மேலும் அதன்முன்புநின்றுபுகைப்படமும் எடுத்து கொண்டனர். பின்னர் குடும்பத்தினருடன் தாவரவியல் பூங்கா புல்வெளி தரையில் அமர்ந்து பேசி மகிழ்ந்தனர். இதேபோல் ஊட்டி படகு இல்லம், தொட்டபெட்டா மலைசிகரம், ரோஜா பூங்கா, குன்னூர் சிமஸ் பூங்கா உள்பட மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களிலும் மக்கள் கூட்டமாகவே காணப்ப ட்டது.

ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் அனைவருமே மலைரெயிலில் பயணிக்க விரும்புவார்கள். வனத்தின் நடுவே வரும் ரெயிலில், அங்குள்ள இயற்கை காட்சிகள், நீர் வீழ்ச்சிகள், நீருற்றுகள், வனவிலங்குகள் போன்றவற்றை ரெயிலில் இருந்தபடியே பார்த்து செல்லலாம் என்பதால் பெரும்பாலானவர்கள் அந்த ரெயிலிலேயே பயணி க்க விரும்புவர். நேற்று நீலகிரிக்கு வந்திருந்த சுற்றுலா பயணி கள் பெரும்பாலானோர்மலை ரெயிலிலேயே பயணித்தனர். சுற்றுலா பயணிகள் வசதிக்காக சனி மற்றும் ஞாயிற்றுக்கிழ மைகளில் சிறப்பு மலை ரெயிலும் இயக்கப்படுகிறது. வருகிற 27ந் தேதி வரை இந்த ரெயில் இயக்கப்பட உள்ளது.

சுற்றுலா வந்தவர்களில் பெரும்பா லனோர் ரெயிலிலேயே பயணித்து நீலகிரிக்கு சென்றனர். அப்போது அவ ர்கள் பல்வேறு இயற்கை காட்சிகளை ரசித்தபடி பயணித்தனர். மேலும் சிறப்பு மலைரெயில் முன்பு நின்று புகைப்படமும் எடுத்து கொண்டனர்.

# மது குடித்து விட்டு வாகனங்கள் ஓட்டிய 70 பைக் பறிமுதல்

தருமபுரி, ஆக. 15

தருமபுரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டீபன் ஜேசுபாதம் உத்தரவுப்படி மாவட்டத்தின் அனைத்து போலீஸ் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் போலீசார் சிறப்பு வாகன சோதனை நடத்தினார்கள். அப்போது போக்குவரத்து விதிகளை மீறி இருசக்கர வாகனங்களை மது அருந்திவிட்டு ஓட்டிச் சென்றது தொடர்பாக மொத்தம் 70 பேர் மீது வழக்குப்பதிவு செய்தனர். 70 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதேபோல் தடை செய்யப்பட்டபுகையிலை பொருட்களை விற்பனை செய்தது தொடர்பாக 27 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. மது பாட்டில்களை பதுக்கி கூடுதல் விலைக்கு விற்பனை செய்தது தொடர்பாக 28 வழக்குகளும், தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை பதுக்கி விற்பனை செய்தது தொடர்பாக 27 வழக்குகளும், பணம் வைத்து சூதாடியது தொடர்பாக 3 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

# விட்டு விட்டு பெய்யும் மழை: குளுகுளு சீசனில் சென்னை மக்கள்

சென்னை, ஆக. 15

சென்னை நகரில் நாளையும் மழை மற்றும் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தகவல்.

சென்னையின் பல்வேறு பகுதிகளில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. கடந்த சில நாட்களாக அவ்வப்போது மழை பெய்து வந்த நிலையில், முழுக்க நகரின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது.



அதன்படி தாம்பரம், குரோம்பேட்டை, பல்லாவரம் உள்ளிட்ட பகுதிகளில் மழை கொட்டித் தீர்த்தது. இதே போன்று வேளச்சேரி, தரமணி, பெருங்குடி, கந்தன்சாவடி உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்தது. நகரின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்த காரணத்தால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவுவதால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முன்னதாக சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையத்தின் அதிகாரப்பூர்வ X வலைதளத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது. இதுதவிர நகரின் பல்வேறு பகுதிகளில் மேகமூட்டமாகவும், சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்பு இருப்பாதக தெரிவித்துள்ளது. மாலை அல்லது இரவு வேலையில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யலாம் என்று தெரிவித்தது.

# பாஜக அரசின் பிடிவாத போக்கால் தந்தை, மகன் பலி: வைகோ

சென்னை, ஆக, 15

தமிழகத்தில் நீட் தோல்வி தற்கொலைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும் என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கேள்வி எழுப்பியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கல்வித்துறையில் மாநில உரிமைகளை பறித்துக் கொண்ட பாஜக அரசின் பிடிவாத போக்கால், தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளதாக வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.



தமிழக அரசின் நீட் விலக்கு சட்ட மசோதாவுக்கு உடனடியாக மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ள வைகோ, தேர்வில் ஏற்படும் தோல்விக்கு தற்கொலை தீர்வாகாது என மாணவர்களுக்கு அறிவுரை தெரிவித்துள்ளார்.

# வெள்ளக்கோவில் சந்தைக்கு 24 டன் முருங்கைக்காய் வரத்து

வெள்ளகோவில், ஆக. 15

மர முருங்கைக்காய் கிலோ ரூ. 9க்கு விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். முருங்கைக்காய்கள் வாரச் சந்தைகள் மற்றும் தனியார் கொள்முதல் மையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

வெள்ளக்கோவில் சந்தைக்கு 24 டன் முருங்கைக்காய் வரத்து ஞாயிற்றுக்கிழமை இருந்தது. வெள்ளக்கோவில் பகுதியில் விளையும் முருங்கைக்காய்கள் இப்பகுதியில் செயல்பட்டு வரும் வாரச் சந்தைகள் மற்றும் தனியார் கொள்முதல் மையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. வெள்ளக்கோவில் முத்தூர் சாலையில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை தனியார் கொள்முதல் மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் கரும்பு முருங்கைக்காய் கிலோ ரூ. 11, செடி முருங்கைக்காய் ரூ.11, மர முருங்கைக்காய் கிலோ ரூ. 9க்கு விவசாயி களிடமிருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.



# பழையகோட்டை மாட்டுச்சந்தையில் காங்கேயம் இன மாடுகள் ரூ.7 லட்சத்துக்கு விற்பனை

காங்கயம், ஆக. 15

ரூ.60 ஆயிரத்துக்கு கன்றுக்குட்டியுடன் காங்கேயம் இன மயிலை வகைப் பசு விற்பனையானது. மாடுகளுக்கான பிரத்யேக சந்தை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று வருகிறது.

திருப்பூர் மாவட்டம் காங்கயம் அருகே, நத்தக்காடையூர்பழையகோட்டையில் காங்கேயம் இன மாடுகளுக்கான பிரத்யேக சந்தை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று வருகிறது. இந்த வாரம் நடைபெற்ற சந்தைக்கு மாடுகள், காளைகள், இளங்கன்றுகள் என 27மாடுகள்விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. இதில், 20 மாடுகள் ரூ.7 லட்சத்துக்கு விற்பனையாயின.இந்த சந்தையில் அதிகபட்சமாக ரூ.60 ஆயிரத்துக்கு கன்றுக்குட்டியுடன் காங்கேயம் இன மயிலை வகைப் பசு விற்பனையானது.



# கிராமசபை கூட்டங்களில் விவசாயிகளின் கோரிக்கைகளை தீர்மானமாக நிறைவேற்ற கோரிக்கை

திருப்பூர், ஆக. 15

சுதந்திரதினத்தை ஒட்டி, நடைபெறும்கிராமசபைக் கூட்டங்களில் விவசாயிகளின் 10 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று தமிழக விவசாயிகள் பாதுகாப்புச் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இது குறித்து தமிழக விவசாயிகள் பாதுகாப்புச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: தமிழக விவசாயிகள் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் 18 மாவட்டங்களில் விவசாயிகளின் அடிப்படையான கோரிக்கை மற்றும் அந்தந்த பகுதி சார்ந்த கோரிக்கை என 10 கோரிக்கைகளை முன்வைத்து ஜூலை 5 ந் தேதி முதல் 26 நாள்கள் தொடர் காத்திருப்புப் போராட்டம் நடைபெற்றது. இதே கோரிக்கைகளை வலியுறுத்தி 22 மாவட்டங்கள் சார்பில் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் மனு அனுப்பும் போராட்டமும் ஆகஸ்ட் 7 ந் தேதி நடைபெற்றது. இதன் அடுத்தகட்டமாக தமிழகம் முழுவதும் சுதந்திர தினத்தை ஒட்டி நடைபெறும் சிறப்பு கிராம சபைக் கூட்டங்களில் 10 அம்சக் கோரிக்கைகளைத் தீர்மானமாக நிறைவேற்ற அந்தந்த பகுதி விவசாயிகள் வலியுறுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமுருகன்பூண்டி அருகே வழிப்பறி வழக்கில் 3 பேர் குண்டர் சட்டத்தில் கைது

திருப்பூர், ஆக.15

ஏவிஎஸ் கார்டன் பகுதியில் திவாகரன் என்பவர் கடந்த ஜூன் 30 ந் தேதி நடந்து சென்றுள்ளார். குற்றச்சம்பவங்களில் ஈடுபட்டதாக 42 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

திருமுருகன்பூண்டி அருகே வழிப்பறி வழக்கில் கைதான 3 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். இது குறித்து திருப்பூர் மாநகரக் காவல் ஆணையர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு: திருமுருகன்பூண்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஏவிஎஸ் கார்டன் பகுதியில் திவாகரன் என்பவர் கடந்த ஜூன் 30 ந் தேதி நடந்து சென்றுள்ளார்.

அப்போது, அந்த வழியாக வந்த 3 பேர் அவரைத் தடுத்து நிறுத்தி செல்போனை பறித்து கொண்டு தப்பிச் சென்றனர். இது குறித்து திருமுருகன்பூண்டி காவல் நிலையத்தில் திவாகரன் அளித்த புகாரின்பேரில் வழக்குப் பதிவு செய்த போலீசார், ராயபுரத்தைச் சேர்ந்த எபின் (19), சாமுண்டிபுரத்தைசேர்ந்த தமிழ்செல்வன் (20), பவானி சாகரை சேர்ந்த விமல்குமார் (20) ஆகிய 3 பேரைகைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இந்த 3 பேரும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்ததால் அவர்களை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் ஒரு ஆண்டு சிறையில் அடைக்கமாநகரகாவல் ஆணையர் பிரவீன்குமார் அபிநபு உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவுக்கான நகலை கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 3 பேரிடமும் திருமுருகன்பூண்டி காவல்துறை யினர் இரவு வழங்கினர்.

திருப்பூர் மாநகரில் நிகழாண்டு தொடர் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டதாக 42 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# மணிப்பூர் பிரச்சினையில் மத்திய அரசு ஆதாயம் தேடுகிறது

சேலம், ஆக. 15

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் சேலத்தில் நடைபெறும் மாநில நிர்வாகக் குழு கூட்டத்தில் பங்கேற்க வந்தார். மணிப்பூர் போன்ற விவகாரங்களில் மக்கள் பிரச்சினைகளை பூர்த்தி செய்யாமல் கலவரம் ஏற்படுத்தி மத்திய அரசு ஆதாயம் தேடுகிறது.



இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் சேலத்தில் நடைபெறும் மாநில நிர்வாகக் குழு கூட்டத்தில் பங்கேற்க வந்தார். முன்னதாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது: பெட்ரோல், டீசல் விலை உயர்வால் அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. இதனை தடுக்க மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வேலையின்மை மிகப்பெரிய சவாலாக உள்ளது. ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவதாக பிரதமர் சொன்னார். ஆனால் மத்திய, மாநில அரசு துறைகளில் காலியாக உள்ள பல்வேறு பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. மணிப்பூர் போன்ற விவகாரங்களில் மக்கள் பிரச்சினைகளை பூர்த்தி செய்யாமல் கலவரம் ஏற்படுத்தி மத்திய அரசு ஆதாயம் தேடுகிறது. நெல்லையில் தொடர்ந்து கொலைகள் நடக்கிறது. இது போன்ற கொலைகளுக்கு பின்னால் இருப்பவர்கள் யார்? என கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நீட் தேர்வை ரத்து செய்ய மாட்டோம் என ஆளுநர் பகிரங்கமாக அறிவிக்கிறார். ஆளுநர் அலுவலகம் பா.ஜ.க பிரசார அலுவலகம் போல செயல்படுகிறது. நீட் தேர்வு காரணமாக தமிழகத்தில் அனிதா உள்பட 25 பேர் தற்கொலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இனியாவது நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும். கல்லூரிகளை காட்டிலும் நீட் பயிற்சி மையம் அதிகமாக உருவாகி உள்ளது. அமலாக்கத்துறை, வருமான வரித்துறைகளை மத்திய அரசு தவறாக பயன்படுத்துகிறது. சட்டப்பேரவையில் நீட் தேர்வு விலக்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் மத்திய அரசு தான் நடவடிக்கை எடுக்க முடியும். மத்திய அரசோடு நெருக்கத்தில் இருக்கும் எடப்பாடி பழனிசாமி பிரதமரிடம் பேசி தமிழகத்திற்கு நீட் தேர்வு விலக்கை கொண்டுவர வேண்டும். அண்ணாமலை பாதயாத்திரை செல்வதாக கூறி சொகுசு பயணமாக சென்று கொண்டிருக்கிறார். அதனால் எந்த பலனும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# கால்நடைகளின் ஓய்வெடுக்கும் அறையாக மாறிய கோத்தகிரி பஸ் நிலையம்

ஊட்டி, ஆக. 15

கால்நடைகளால் மக்கள் மிகுந்த சிரமம் அடைகிறார்கள். கோத்திகிரி பஸ் நிலைய பகுதிகளில் சுற்றி திரியும் மாடுகளையும் பிடிக்க வேண்டும். மேலும்படிக்கஅரவேணு, நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் அண்ணா பஸ் நிலையம் அமைந்துள்ளது. இந்த பஸ் நிலையத்தில் மேட்டுப்பாளையம், ஊட்டி, குன்னூர் மற்றும் கோத்தகிரி சுற்று வட்டாரங்களில் உள்ள கிராம பகுதிகளில் இருந்து பஸ்கள் இயக்கப்ப ட்டு வருகின்றன. ஒரு நாளைக்கு 100க்கும் மேற்பட்ட பஸ்கள் இந்த பஸ் நிலையத்தில் இருந்து செல்கிறது. இந்த பஸ் நிலையத்தை கோத்தகிரி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இப்படி அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்தி வரும் இந்த பஸ் நிலையம் அண்மைக்காலமாக கால்நடைகளின் கூடாரமாக மாறி வருகிறது. பஸ் நிலைய பகுதிகளில் சுற்றி திரியும் ஆடு, மாடுகள் சாலைகளில் கிடக்கும் உணவுகளை தின்று விட்டு, நேராக பயணிகள் காத்திருக்கும் பகுதியில் வந்து ஆங்காங்கே படுத்து ஓய்வெடுத்து வருகின்றன. மாடுகள் படுத்து இருப்பதால் மக்கள் அந்த இடத்தை விட்டு சற்று தொலைவிலேயே அமர்ந்து இருக்கின்றனர். மேலும் சில மாடுகள் பயணிகள் செல்ல முடியாத அளவுக்கு நடுவழியிலும் ஓய்வெடுக்கின்றன. இதனால் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலேயே பஸ் நிலையத்தை பயன்படுத்தி வருகின்றனர். சில நேரங்களில் அசம்பாவித சம்பவங்களும் ஏற்பட்டு வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு கூட சென்னையில் தாயுடன் சென்ற, மாணவியை மாடு ஒன்று மூட்டி தூக்கி வீசிய சம்பவம் நிகழ்ந்தது. இந்த பஸ் நிலையத்திற்கு அதிகளவில் மாணவ, மாணவிகள் வந்து செல்கிறார்கள். எனவே அதுபோன்ற சம்பவங்கள் ஏதும் நடப்பதற்கு முன்பாக கோத்திகிரி பஸ் நிலைய பகுதிகளில் சுற்றி திரியும் மாடுகளையும் பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.



# காட்பாடி சாலையில் கால்வாயில் தேங்கி நிற்கும் கழிவுநீர்

வேலூர், ஆக. 15

துர்நாற்றம் வீசுவதால் பயணிகள் அவதி நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை மேலும் படிக்க வேலூர்: வேலூர் காட்பாடி சாலையில் தபால் நிலையம் அருகே உள்ள கால்வாயில் கழிவு நீர் செல்ல வழி இல்லாமல் தேங்கி உள்ளது. வேலூர் சிஎம்சி யில் சிகிச்சை பெறுவதற்காக வரும் நோயாளிகள் மற்றும் ஊழியர்கள் மார்க்கெட்டில் பொருட்கள் வாங்க வந்து செல்லும் பயணிகள் காட்பாடி சாலையில்உள்ளபஸ்நிறுத்தத்தில் பஸ்சிற்க்காக காத்துக் கொண்டு இருக்கின்றனர். கால்வாயில் தேங்கியுள்ள கழிவுநீர் துர்நாற்றம் வீசுவதால் பஸ்காக காத்திருக்கும் பயணிகள் மற்றும் அந்த வழியாக செல்லும் பொதுமக்கள் கடும் அவதி அடைந்து வருகின்றனர். காட்பாடி சாலையில் உள்ள கால்வாய்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு தூர்வாரப்பட்டது. அதன் பிறகு மாநகராட்சி ஊழியர்கள் கால்வாயில் உள்ள அடைப்புகளை அப்புறப்படுத்தவில்லை.




இதனால் அங்குள்ள தங்கம் விடுதிகள், வணிக வளாகங்களில் இருந்து வெளியேறும் கால்வாயில் அடைப்பு உள்ளதால் கழிவு நீர் கால்வாயில் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. மேலும் சாலையில் கழிவுநீர் வழிந்து ஓடுகிறது. அந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் துர்நாற்றம் தாங்க முடியாமல் மூக்கை பிடித்தபடி கடந்து செல்கின்றனர். இதேபோல் பெங்களூர் சாலையில் உள்ளடி மண்டி தெருவில் அரிசி பருப்பு எண்ணெய் மிளகாய் உள்ளிட்ட மளிகை பொருட்கள் மொத்தமாக விற்பனை செய்யும் வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. அங்குள்ள கால்வாயில் கழிவுநீர் செல்ல வழியில்லாததால் சாலையில் கழிவு நீர் தேங்கி உள்ளது. இதனால் வர்த்தக நிறுவன உரிமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் பொருட்கள் வாங்க வந்து செல்லும் வாடிக்கையாளர்கள்கழிவு நீரை கடந்து செல்ல கடும் அவதி அடைந்து வருகின்றனர். எனவே மாநகராட்சி அதிகாரிகள் கால்வாய்களில் உள்ள அடைப்புகளை தூர்வாரி அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கடுக்கரை ஊராட்சியில் சுகாதாரத் திருவிழா மருத்துவ முகாம்: விஜய்வசந்த் எம்.பி. தொடங்கி வைத்தார்

கன்னியாகுமரி, ஆக. 14

டெங்கு, புகையிலை, தொழுநோய், காசநோய், ஊட்டச்சத்து போன்ற விழிப்புணர்வு கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. முகாம் ஏற்பாடுகளை வட்டார மருத்துவ அலுவலர் ஏற்பாடு செய்திருந்தனர்.



கடுக்கரை ஊராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை சார்பில் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் நிதியிலிருந்து சுகாதாரத் திருவிழா மருத்துவ முகாமை கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் எம். பி குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்த முகாமில் பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, நரம்பியல் மருத்துவம், சிறுநீரக மருத்துவம், பல் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, மனநலம் சிகிச்சை, கண் மருத்துவம், புகையிலை சம்பந்தமானசிகிச்சைகள், தொழுநோய், காசநோய், சித்த மருத்துவம், ஹோமியோபதி சம்பந்தமான சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொண்டார்கள் . டெங்கு, புகையிலை, தொழுநோய், காசநோய், ஊட்டச்சத்து போன்ற விழிப்புணர்வு கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. முகாம் ஏற்பாடுகளை வட்டார மருத்துவ அலுவலர் ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்ச்சியில் மாநில செயலாளர் வழக்கறிஞர் ஸ்ரீனிவாசன், காங்கிரஸ் வட்டார தலைவர் செல்வராஜ், கிழக்கு மாவட்ட திமுக துணைச்செயலாளர் பூதலிங்கம் காங்கிரஸ் நிர்வாகிகள் சீலன், ஹென்றி, ராபி உட்பட பேரூராட்சி தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# கிராம மக்கள் திரண்டு வந்து கலெக்டர் அலுவலகத்தில் மனு

ஈரோடு, ஆக. 15

ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் இன்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இதற்காக மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்து வந்திருந்த மக்கள் தங்களது கோரிக்கை குறித்த மனுக்களை கலெக்டரிடம் வழங்கினர். அப்போது கிராம மக்கள் திரண்டு வந்து கலெக்டரிடம் மனு கொடுத்தனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது: எங்கள் ஊர் மக்களின் குல தெய்வமான மதுரை வீரன் சுவாமி தங்க தேரினை எங்கள் ஊரில் உள்ள எங்கள் கோவிலுக்கு கொண்டு சென்று வழிபட உள்ளோம்.

இதற்கான வாகன வசதி மற்றும் இதர வசதிகளை ஆற்றல் அறக்கட்டளையினர் செய்து தர முன் வந்துள்ளார்கள். ஆகையால் மதுரை வீரன் தேரானது பாதுகாப்பாக முழுவதும் மூடி வைக்கப்பட்ட வாகனத்தில் எடுத்து வந்து எங்கள் ஊரில் வைத்து பூஜை செய்து வழிபட இருக்கிறோம். வழிபாடு முடிந்தவுடன் அதே வாகனத்திலேயே திருப்பி அனுப்பி வைக்க உள்ளோம். எங்கள் ஊரில் எந்த பிரதான சாலையும் கிடை யாது. எங்கள் ஊரானது கிராமப் பகுதிகளின் உட்பகுதியில் உள்ள ஊராகும். எனவே பொது மக்களுக்கு எவ்விதமான போக்குவரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்புகள் இல்லை. இதனால் பொதுமக்களுக்கு எந்த இடையூறும் வராது என்று உறுதியளிக்கிறோம்.

இந்த மதுரவீரன் கோவில் ஈரோடு, திருப்பூர் மற்றும் நாமக்கல் ஆகிய 3 மாவட்ட த்திற்கு உட்பட்ட 32 பஞ்சா யத்துகளில் உள்ள எங்கள் ஊர் மக்களின் குல தெய்வமாக உள்ளது. ஆகையால் ஊர்வலம் நடத்த அனுமதி அளிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் அதில் கூறியுள்ளனர்.

# 589 ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம்

தஞ்சாவூர், ஆக. 15

சுதந்திர தினத்தை முன்னிட்டு காலை 11 மணிக்கு கிராமசபை கூட்டம் நடைபெற உள்ளது. பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் தீபக்ஜேக்கப் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது : சுதந்திர தினத்தை முன்னிட்டு காலை 11 மணிக்குதஞ்சாவூர்மாவட்டத்தில் உள்ள 589 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம் நடைபெற உள்ளது. இந்தகூட்டத்தில் கிராம ஊராட்சிகளின் வளர்ச்சி திட்டங்கள் குறித்து பொதுமக்களுடன் அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்று விவாதிக்க உள்ளனர். எனவே கிராம சபை கூட்டத்திற்கு மாவட்டத்தில் கிராம ஊராட்சி பகுதியில் உள்ள பொதுமக்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பித்திட கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆடி அமாவாசையை முன்னிட்டு நெல்லை மாவட்டத்திற்கு நாளை விடுமுறை அளிக்க வேண்டும்: கலெக்டரிடம் காங்கிரசார் மனு

நெல்லை, ஆக. 15

நெல்லை, தென்காசி மற்றும் தென் மாவட்ட மக்களின் முக்கியமான ஆன்மீக நிகழ்ச்சியாக ஆடி அமாவாசை இருந்து வருகிறது. குடிபோதையில் வரும் நபர்கள் ரோட்டில் அவதூறான செயல்களில் ஈடுபடுவதுமாக உள்ளனர்.



நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் இன்று வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் கார்த்திகேயன் கலந்து கொண்டு பொது மக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார்.

நெல்லை மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் சங்கர பாண்டியன் தலைமையில் நிர்வாகிகள் ஒரு மனு கொடுத்தனர். அதில் அவர்கள் கூறியிருப்ப தாவது: உள்ளூர் விடுமுறை நெல்லை, தென்காசி மற்றும் தென் மாவட்ட மக்களின் முக்கியமான ஆன்மீக நிகழ்ச்சியாக ஆடி அமாவாசை இருந்து வருகிறது. இந்த ஆண்டுக்கான ஆடி அமாவாசை நாளை மறுநாள் (புதன்கிழமை) வருகிறது. எனவே அந்த நாளில் தென் மாவட்ட மக்கள் வழிபாடு செய்வ தற்கும், குடும்பத்தோடு கோவிலுக்கு செல்வதற்கும் வாய்ப்பாக அன்றைய தினத்தை உள்ளூர் விடுமுறையாக அறிவிக்க வேண்டும். மேலும் திருவிழா காலம் முடியும் வரை வழக்கம் போல் சொரிமுத்து அய்யனார் கோவிலில் தங்குவதற்கும், வாகனங்களில் செல்வதற்கும் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுத்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

சமத்துவ மக்கள்கட்சி அகில இந்திய சமத்துவ மக்கள்கட்சியின்நெல்லை மாநகர் மாவட்ட செயலாளர் அழகேசன் தலைமையில் மகளிர் அணி செயலாளர் லட்சுமி மற்றும் நிர்வாகிகள் திரண்டு வந்து கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது: நெல்லை மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் கடைகளில் பெரும்பாலானவை பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களிலும், பள்ளி, கல்லூரி, வழிபாட்டுத்தலங்களின் அருகிலும் செயல்பட்டு வருகிறது. இதனால் கடைகளில் மது அருந்திவிட்டு குடிபோதையில் வரும் நபர்கள் ஆபாசமாக ரோட்டில் சுற்றி திரிவதும், ஆபாச வார்த்தைகளால் பேசித் திரிவதும், அவதூறான செயல்களில் ஈடுபடுவதுமாக உள்ளனர். இதனால் பொதுமக்கள், பெண்கள், மாணவமாணவிகள்முகம் சுளிக்கும் நிலை ஏற்படுகிறது. குறிப்பாக டவுன் நயினார்குளம் சாலையில் உள்ள டாஸ்மாக் கடையில் மது வாங்கி செல்லும் நபர்கள் சாலையில் வைத்து பொதுமக்கள் பார்வையில் படும்படி மது அருந்தி விட்டு அந்த பாட்டில்களை நயினார்குளத்தில் வீசுகின்றனர். ஒரு சிலர் போதையில் அந்த பாட்டில்களை சாலையில் போட்டு உடைக்கும் சம்பவங்களும் நடைபெறுகிறது. மேலும் அவர்கள் சாலையில் நடந்து செல்பவர்களை மிரட்டுவதும், ஆபாசமாக திட்டுவது போன்ற செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதுபோன்ற சம்பவங்கள் மேற்கொண்டு நடைபெறாமல் இருக்க பொது இடங்களில் உள்ள மதுக்கடைகளை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் மகளிர் அணி சார்பில் போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு இதில் கூறியிருந்தனர்.

பாரதிய ஜனதா பாரதிய ஜனதாகட்சியின்நெல்லை மாவட்ட செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன் கொடுத்த மனுவில்,நெல்லை அரசு மருத்துவமனையில் ரத்த வங்கி செயல்பட்டு வருகிறது. இதன் தொலைபேசி எண் 04622576878 ஆகும். இந்த தொலைபேசி எண்ணானது கடந்த ஒரு மாதமாக செயல்பாட்டில் இல்லை.

இதனால் பொதுமக்களும், நோயாளிகளும் தொலைபேசியில் தொடர்பு கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே உடனடியாக தொலைபேசியை செயல்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தார்.

# சூலூர் அருகே கடைகளில் போதை பொருட்கள் விற்பதை தடுக்க வேண்டும்

கோவை, ஆக. 15

கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் கோரிக்கை மனு அளித்தனர். போதைப் பொருட்கள் விற்பதைக் குறித்து கேட்டால் அடியாட்களை வைத்து மிரட்டுகின்றனர்.




கோவை கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் கிராந்திகுமார் பாடி தலைமையில் மக்கள் குறைதீர்முகாம் நடந்தது. இதில் ஏராளமான பொதுமக்கள், அரசியல் கட்சியினர், பல்வேறு அமைப்பினர் உள்ளிட்டோர் பங்கேற்று கோரிக்கை மனுக்களை வழங்கினர். சூலூர் பதுவ ம்பள்ளியை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மக்கள் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: எங்கள் பகுதியில் செயல்படும் பெட்டிக்கடை ஒன்றில் அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருட்கள், கஞ்சா உள்ளிட்டவை விற்கப்படுகிறது. இதுகுறித்து அவரிடம் கேட்டால் அடியாட்களை வைத்து மிரட்டுகின்றனர். போதை பொருட்கள் விற்கப்படுவதாலும், அதனை வாங்கி சாப்பிடுபவர்களாலும் அந்த வழியாக செல்லக்கூடிய பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுகிறது. குறிப்பாக இரவு நேரங்களில் வெளியில் வரவே அச்சமாக உள்ளது. எனவே இதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது. கோவை மாநகராட்சி 20வது வார்டு கவுன்சிலர் மரியராஜ், 26வது வார்டு கவுன்சிலர் சித்ரா, 28வது வார்டு கண்ணகி ஆகியோர் கலெக்டரிடம் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: திண்டுக்கல் மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து, கோவை சத்தி சாலையில் உள்ள எப்.சி.ஐ. குடோனுக்கு செல்லும் வழியில் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் பாதை ஒன்று உள்ளது. தற்போது இந்த பாதையை சீரமைக்கும் பணியை இந்திய உணவுக் கழகம் செய்து வருகிறது. சத்தி சாலையில் இருந்து அந்த பாதை நுழையும் இடத்தில், நுழைவாயில் ஒன்று அமைத்து அதில் உணவுக் கழக வாகனங்கள் மட்டும் அனுமதிக்கப்பட ஏதுவாக, வாயில் கதவு ஒன்றும் அமைக்கப்பட உள்ளதாக தெரிகிறது. அவ்வாறு அமைத்தால் மேற்கண்ட 3 வார்டுகளை சேர்ந்த மக்கள் தங்கள் குடியிருப்பு பகுதிக்கு செல்வதில் சிரமம் ஏற்படும். மேலும் சத்தி சாலையிலிருந்து, அவினாசிக்கு செல்வோர் 6 கிலோமீட்டர் தூரம் வரை சுற்றி செல்ல வேண்டிய நிலை ஏற்படும். கலெக்டர் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

# வலங்கைமானில் ஆர்ப்பாட்டம்

நீடாமங்கலம், ஆக. 15

கருகும் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும். நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டுகோஷங்கள் எழுப்பினர்.




சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் படி ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதத்திற்கான தண்ணீரை விடுவிக்க வேண்டும், தண்ணீரின்றி கருகும் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் ஒன்றிய செயலாளர் செந்தில் குமார் தலைமையில் வலங்கைமானில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட நிர்வாகக்குழு ராஜா கலந்து கொண்டு பேசினார். ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் ஒன்றிய துணை செயலாளர் செல்வராஜ், தமிழ் நாடு விவசாய சங்க ஒன்றிய தலைவர் கலிய பெருமாள்,

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் ரவி, ஒன்றிய பொருளாளர் மருதையன், இளைஞர் பெருமன்ற ஒன்றிய செயலாளர் பாக்யராஜ், மாதர் சங்க ஒன்றிய செயலாளர் தேவிகா மற்றும் உறுப்பினர்கள், கிளை செயலாளர்கள் கலந்து கொண்டு கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# இந்திய குடியுரிமை பெற்ற நடிகர் அக்ஷய்குமார்.. வாழ்த்தும் ரசிகர்கள்



நடிகர் அக்ஷய்குமார் பல திரைப்படங்களில் நடித்துள்ளார். இவர் '2.0' படத்தில் ரஜினிக்கு வில்லனாக நடித்தார். மேலும் படிக்க தமிழில் '2.0' படத்தில் ரஜினிக்கு வில்லனாக நடித்தவர் அக்ஷய்குமார். இந்தியில் அதிக சம்பளம் பெறும் முன்னணி கதாநாயகனாக இருக்கிறார். இந்தியா மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் அக்ஷய்குமாருக்கு அதிக ரசிகர்கள் உள்ளனர். கடந்த 30 ஆண்டுகளாக இந்திய திரைத்துறையில் முன்னணி நடிகராக இருந்து வரும் அக்ஷய் குமார் இந்திய குடியுரிமை பெற்றுள்ளதாக அறிவித்துள்ளார். என்னதான் இந்திய படங்களில் நடித்தாலும்நடிகர்அக்ஷய் குமார்கனடாநாட்டு குடிமகன்தான்எனபலர்விமர்சனம் செய்து வந்தனர். இந்நிலையில், இவர் இந்திய குடியுரிமை பெற்றுள்ளதற்கான சான்றை பகிர்ந்து தனது சுதந்திர தின வாழ்த்தை தெரிவித்துள்ளார். அவருக்கு அவரது ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். நடிகர் அக்ஷய்குமார் கடந்த 2019ஆம் ஆண்டு இந்திய பாஸ்போர்டுக்காக விண்ணப்பித்ததாகவும் கொரோனா பெருந்தொற்று காரணமாக அதை பெறுவதில் காலதாமதமானது என அவர் தெரிவித்திருந்தார்.

# சோனம் கபூரிடம் மன்னிப்பு கேட்ட பாகுபலி நடிகர்.. ஏன் தெரியுமா?





'கிங் ஆஃப் கோதா' திரைப்படத்தின் புரொமோஷன் நிகழ்ச்சி சமீபத்தில் நடைபெற்றது. இதில் நடிகர் டாணா டகுபதி பேசியது பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் படிக்க இயக்குனர் அபிலாஷ் ஜோஷி இயக்கத்தில் துல்கர் சல்மான் நடித்திருக்கும் திரைப்படம் 'கிங் ஆஃப் கோதா'. ஜீ ஸ்டுடியோஸ் மற்றும் வேஃபேரர் ஃபிலிம்ஸ் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளது.

ஜேக்ஸ் பிஜாய் மற்றும் ஷான் ரஹ்மான் இணைந்து இசையமைக்கும் இப்படத்திற்கு நிமிஷ் ரவி ஒளிப்பதிவு செய்கிறார். இப்படம் ஓணம் அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து சமீபத்தில் இப்படத்தின் புரொமோஷன் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் நடிகர்கள் நானி மற்றும் ராணா டகுபதி கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் பேசிய ராணா டகுபதி, "பிரபல இந்தி படம் ஒன்றில் நடிகர் துல்கர் சல்மான் நடித்து கொண்டிருந்த போது பாலிவுட்டின் முன்னணி கதாநாயகி ஒருவர் படப்பிடிப்பிற்கு நடுவே தனது கணவருடன் போனில் பேசிக் கொண்டு ஷாப்பிங் செய்து கொண்டிருந்தார். அதுமட்டுமல்லாமல் அவர் தன் டைலாக்கையும் மறந்து பல டேக்குகளை எடுத்துக் கொண்டார். இதனை பார்த்துக் கொண்டிருந்த துல்கர் சல்மான் மிகவும் அமைதியாக அவர் கேட்கும் டேக்குகளை கொடுத்தார்" என்று கூறினார். இந்த வீடியோ வைரலானதைத் தொடர்ந்து பலர் சோனம் கபூரை தான் ராணா சொல்கிறார் என்று தகவல்களை பரப்பி வந்தனர். இந்நிலையில், இந்த வதந்திக்கு மறுப்பு தெரிவித்து நடிகர் ராணா தனது சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "நான் சோனம் கபூர் குறித்து கூறியதாக பரவி வந்த செய்தி முற்றிலும் தவறானது. நண்பர்களாக, நாங்கள் அடிக்கடி விளையாட்டுத்தனமான கேலிகளை பரிமாறிக்கொள்கிறோம். எனது வார்த்தைகள் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். சோனம் மற்றும் துல்கர் இருவரிடமும் எனது மனப்பூர்வமான மன்னிப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பதிவு தவறான புரிதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என நம்புகிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

# சிறப்பு வீடியோ வெளியிட்ட சிவகார்த்திகேயனின் 'எஸ்கே21' படக்குழு



நடிகர் சிவகார்த்திகேயன் 'எஸ்கே21' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகரான சிவகார்த்திகேயன், மாவீரன் வெற்றியைத் தொடர்ந்து தற்போது 'எஸ்கே21' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை ரங்கூன் படத்தை இயக்கிய ராஜ்குமார் பெரியசாமி இயக்குகிறார். இப்படத்தில் சாய் பல்லவி நாயகியாக நடிக்கிறார். இப்படத்தை கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனம் தயாரிக்க, ஜிவி பிரகாஷ் குமார் இசையமைக்கிறார். 'எஸ்கே21' படத்தின் படப்பிடிப்பு காஷ்மீரில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்து படக்குழு வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த வீடியோ சமூக வலைதளத்தில் ட்ரெண்டாகி வருகிறது.

# இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய கீதத்தின் சிறப்பு பாடலை வெளியிட்ட கிராமி இசை கலைஞர்



இசை கலைஞரான ரிக்கி கேஜி இந்திய தேசிய கீதத்தின் சிறப்பு பாடல் ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த இசை லண்டனில் உள்ள பிரபல ஸ்டுடியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு, 3 முறை கிராமி விருது பெற்ற இசை கலைஞரான ரிக்கி கேஜி லண்டனில் உள்ள புகழ்பெற்ற ராயல் பில்ஹார்மோனிக் இசைக்குழுவுடன் இணைந்து இந்திய தேசிய கீதத்தின் சிறப்பு பாடல் ஒன்றை வெளியிட்டுள்ளார். 100 உறுப்பினர்களை கொண்ட ராயல் பில்ஹார்மோனிக் ஆர்க்கெஸ்ட்ராவின் இந்த இசை லண்டனில் உள்ள பிரபல ஸ்டுடியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வீடியோ இனையத்தில் வைரலாகி வருகிறது. இதை பார்த்த சசிதரூர் எம்.பி., பா.ஜ.க. எம்.பி. பூனம் மகாஜன் உள்ளிட்ட பலரும் இந்த வீடியோவை பகிர்ந்து ரிக்கி கேஜை பாராட்டி வருகின்றனர்.

# கனடா ஓபன் டென்னிஸ் சாம்பியன் பட்டம் வென்றார்: ஜானிக் சின்னர்



கனடா ஓபன் டென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டி நடந்தது. இதில் இத்தாலி வீரர் ஜானிக் சின்னர் வென்று சாம்பியன் பட்டம் பெற்றார். கனடா ஓபன் டென்னிஸ் தொடர் மாண்ட்ரியல் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி இன்று நடைபெற்றது.

இத்தாலி வீரர் ஜானிக் சின்னர், ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாருடன் மோதினார். இந்தப் போட்டியில் ஜானிக் சின்னர் 64, 61 என்ற செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் வென்றார். இதே போல், பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் ஜெசிக்கா பெகுலா, ரஷியாவின் சாம்சனோவாவுடன் மோதினார். இதில் பெகுலா 61, 60 என்ற நேர் செட்களில் வென்று சாம்பியன் பட்டம் வென்றார்.

# இந்தியா போன்ற அணிக்கு எதிராக தொடரை வெல்வது பெரிய விஷயம் ரோவ்மேன் பவல்



இந்த வெற்றியை வார்த்தைகளால் கூறுவது கடினம். எங்கள் முகத்தில் சிரிப்பை வரவழைப்பதற்காக மட்டுமல்லாமல், மக்களுக்காகவும் நாங்கள் விளையாடுகிறோம்.

கடைசி டி20 போட்டியில், இந்திய அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் வீழ்த்தி தொடரைக் கைப்பற்றியது. இதன்மூலம் 17 ஆண்டுகளுக்கு பின் இந்திய அணியை ஒரு தொடரில் வீழ்த்தி மேற்கிந்திய தீவுகள் அணி சாதனை படைத்தது. அதேபோல் 12 டி20 தொடர்களில் ஒன்றில் கூட தோல்வியடையாமல் இருந்து வந்த இந்திய அணிக்கு முட்டுக்கட்டை போட்டது. இந்நிலையில் மக்களுக்காகவும் நாங்கள் விளையாடுகிறோம் என்று தொடரை வென்ற பின்னர் மேற்கிந்திய தீவுகள் கேப்டன் ரோவ்மன் பாவெல் கூறினர். இது குறித்து அவர் கூறியதாவது: இந்த வெற்றியை வார்த்தைகளால் கூறுவதுகடினம். எங்கள் உணர்வுகளை கூற போதுமான சொற்கள் இல்லை. ஒரு நெடிய தொடரில் இந்திய அணியை தோற்கடித்துள்ளோம். நேற்று இரவு (4வது போட்டி அன்று) நாங்கள் மோசமாக தோற்கடிக்கப்பட்ட பிறகு உட்கார்ந்து பேசினோம். எங்கள் முகத்தில் சிரிப்பை வரவழைப்பதற்காக மட்டுமல்லாமல், மக்களுக்காகவும் நாங்கள் விளையாடுகிறோம். பயிற்சி ஊழியர், சேர்மன் ஆகியோருக்கு இந்த பெருமை போய்சேரும். இந்தியா போன்ற அணிக்கு எதிராக தொடரை வெல்வது பெரிய விஷயம். தனிப்பட்ட செயல்திறனில் நான் பெரியவன், தனிநபர்கள் சிறப்பாக செயல்படும் போது அது அணிக்கு உதவுகிறது. நிக்கோலஸ் பூரன் ஒரு சிறந்த வீரர். ஐந்து ஆட்டங்களிலும் ஒரு வீரர் ரன்களை குவிப்பது எளிதல்ல என்று எங்களுக்குத் தெரியும். ஆனால் குறைந்தபட்சம் மூன்று போட்டிகளில் சிறப்பான ரன்களை சேர்த்தால் வெற்றிகள் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.



# உலக ஹாக்கி தரவரிசை: 2வது முறையாக 3வது இடத்துக்கு முன்னேறிய இந்திய அணி

ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டி தொடரில் இந்திய அணி தோல்வியை சந்திக்காமல் பட்டம் வென்றது. உலக தரவரிசையில் இந்திய அணி 3வது இடத்தை பிடிப்பது இது 2வது முறையாகும்.

உலக ஹாக்கி அணிகளின் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச ஹாக்கி சம்மேளனம் நேற்று வெளியிட்டது. இதன்படி இந்திய அணி (2771.35 புள்ளிகள்), இங்கிலாந்தை (2763.50 புள்ளிகள்) பின்னுக்கு தள்ளி ஒரு இடம் முன்னேறி 3வது இடத்தை பிடித்துள்ளது. சென்னையில் நடந்த ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி, மலேசியாவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றதன் மூலம் இந்த உயர்வை பெற்றுள்ளது. ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டி தொடரில் இந்திய அணி தோல்வியை சந்திக்காமல் பட்டம் வென்றது. ஜப்பானுக்கு எதிரான லீக் ஆட்டத்தில் மட்டும் டிரா கண்டு இருந்தது குறிப்பிடத்தக்கது. உலக தரவரிசையில் இந்திய அணி 3வது இடத்தை பிடிப்பது இது 2வது முறையாகும். இதற்கு முன்பு 2021ம் ஆண்டு டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றதன் மூலம் இந்திய அணி 3வது இடத்தை பிடித்து இருந்தது. நெதர்லாந்து அணி (3095.90 புள்ளிகள்) முதலிடத்திலும், பெல்ஜியம் அணி (2917.87 புள்ளிகள்) 2வது இடத்திலும் தொடருகின்றன. ஜெர்மனி அணி 5வது இடத்திலும், ஆஸ்திரேலிய அணி 6வது இடத்திலும், ஸ்பெயின் அணி 7வது இடத்திலும், அர்ஜென்டினா அணி 8வது இடத்திலும், ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டியில் 2வது இடம் பிடித்த மலேசிய அணி 9வது இடத்திலும், நியூசிலாந்து அணி 10வது இடத்திலும் நீடிக்கின்றன. தென்கொரியா அணி 11வது இடமும், பாகிஸ்தான் அணி 16வது இடமும், ஜப்பான் அணி 18வது இடமும் வகிக்கின்றன.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.